**வாசிக்க**: **தானியேல்** 2:19-47

**மறைபொருளை சொல்பவருக்கல்ல; வெளிபடுத்தியவருக்கே மகிமை**

தானியேலும் அவன் நண்பர்களும் ஜெபித்த இராத்திரியில் தானே கர்த்தர் மறைபொருளை வெளிப்படுத்தினார். உடனே தானியேல் பரலோகத்தின் தேவனுடைய நாமத்தை ஸ்தோத்தரித்து. என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்கு ஞானமும் வல்லமையும் கொடுத்து, நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக் கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து, ராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால், உம்மைத் துதித்துப் புகழுகிறேன் என சொல்லி தொழுது கொண்டான். பின்பு தானியேல் பாபிலோனின் அதிகாரியான ஆரியோகினிடத்தில் போய்: ராஜாவுக்கு அர்த்தத்தை நான் தெரிவிப்பேன் என்று சொன்னான்.

ராஜா தானியேலை நோக்கி: நான் கண்ட சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் நீ எனக்கு அறிவிக்கக்கூடுமா என்று கேட்டான். உடனே தானியேல் மறைபொருள்களை வெளிப்படுத்துகிற, பரலோகத்தில் இருக்கிற, தேவனாகிய கர்த்தர் கடைசிநாட்களில் சம்பவிப்பதை ராஜாவுக்கு தெரிவித்திருக்கிறார் என்று சொல்லி சொப்பனத்தையும், அதின் பொருளையும் விளக்கி கூறினான். உடனே ராஜா தானியேலை புகழ்ந்து, அவனை தேவனை போல நடத்தினான்.

ஆனால் தானியேலோ தாழ்மையோடு உயிரோடிருக்கிற எல்லாரை பார்க்கிலும் எனக்கு அதிக ஞானம் உண்டென்பதினாலே அர்த்தம் வெளிப்படவில்லை. ராஜாவுக்குத் தெரியவரவும், உம்முடைய இருதயத்தின் நினைவுகளை நீர் அறியவும், இந்த மறைபொருள் எனக்கு வெளியாக்கப்பட்டது. ராஜா தானியேலை நோக்கி: நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார் என்றான்.

**கேள்வி**:

ஜெபித்தது நான்கு பேர். அதில் தானியேலுக்கு மட்டும் இரகசியம் வெளிப்படுத்தியதன் காரணமென்ன..?

**பதில்**:

நான்குபேரும் கர்த்தரை நேசிப்பவர்கள். அவருக்காகவே பாபிலோன் தேசத்தில் வாழ்ந்தவர்கள். ஒவ்வொருவரிடத்திலும் ஒரு விசேஷ குணத்தை தேவன் அருளி உள்ளார். ஆதலால் அவர்களை ஒப்பிட்டு பார்க்காமல் தனித்துவங்களை தனித்தனியாகவே பார்க்கவேண்டும்.

1) தானியேல் செய்தியை கேட்டவுடன் அதற்கு பிரதிபலித்தான்.

2) தானியேல் தனியாக நின்று அல்ல கூட்டாக இணைந்து ஜெபிக்க வைத்தான்.

3) தேவன் வெளிப்படுத்திய காரியங்களினிமித்தம் பெருமை கொள்ளாமல் தாழ்மையாக இருந்தான்.

4) ராஜா தானியேலை புகழ்ந்தவுடனே அது எனக்குரியதல்ல; தேவனுக்கே உரியது என்பதை வெளிப்படுத்தினான்.

5) ராஜாவை தன்னை ரசிக்கவிடாமல் தேவனையே ரசிக்கவைத்தான். இந்த நற்குணமெல்லாம் கர்த்தருக்கு பிடித்தபடியால்தான், தாவீதுக்கு அடுத்து

பிரியமானவன் என்ற பெயரை தானியேல் பெற்றான். அருமையான தம்பி தங்கச்சி நீங்களும் இப்படியாக வாழ்ந்து கர்த்தரை பிரியபடுத்துவீர்களா!

நீ(தானியேல்) மிகவும் பிரியமானவன். ஆதலால், நீ வேண்டிக்கொள்ள தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்கவந்தேன். இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள். தானியேல் 9 :23

**ஜெபம்**

தானியேலின் தேவனே! எங்களையும் உங்க பிள்ளையாக ஏற்று, இயேசப்பா தகப்பனாயிருந்து பராமரித்து வழி நடத்தும் கிருபைக்கு நன்றியப்பா.

தாழ்மையுள்ள பிள்ளைகளாய் இருப்போம். ஆமென்